DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

அமர்வு வழக்கு எண்.229/2021

அ.சா.– 6

பெயர் : திரு . கௌதம்	கிராமம்: அம்மாபேட்டை
த/பெ. : திரு. முருகேசன்	தாலூக்கா : சேலம்
வயது : 27	தொழில்: கூலி வேலை

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 44 of 1969, this the 08th day of September, 2025.

(2 முதல்4 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்குரைஞர் ஆஜர்)

முதல்விசாரணை:–

நான் அம்மாபேட்டை, நஞ்சம்பட்டியில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளையும், இறந்துபோன 1ம் எதிரியையும் எனக்கு தெரியும். இவ்வழக்கில் இறந்துபோன திலிப்குமார் எனது அத்தை மகன் ஆவார். எனது அத்தை மற்றும் அவரது குடும்பத்தினர் நாழிக்கல்பட்டியில் வசித்து வருகிறார்கள். சுமார் 6 வருடத்திற்கு முன்பு நான் வேலைக்கு சென்றுவிட்டேன். அப்போது என் அத்தை எனக்கு போன் செய்து திலிப்குமாருக்கு உடல்நிலை சரியில்லை என்றும், மருத்துவமனைக்கு சேர்த்திருப்பதாகவும் அதனால் என்னை மருத்துவமனைக்கு வரும்படியும் சொன்னார். நான் எனது அத்தை சொல்லியபடி சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது திலிப்குமார் இறந்துவிட்டார். அவரது இறப்பிற்கான காரணம் எனக்கு தெரியாது. பின்னிட்டும் நான் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கேட்டு, அனுமதிக்கப்பட்டது.)

Sd/- R. Velaras,
I Addional District Judge,
Salem

குறுக்குவிசாரணை(அரசு தரப்பில்):-

நான் போலிசார் விசரணையில் அம்மாபேட்டை, நஞ்சம்பட்டியில் வசித்து வருவதாகவும், இளையபாரதம் நண்பர்கள் குழு நாழிக்கல்பட்டியில் செயல் பட்டு வருவதாகவும், அந்த குழுவில் திலிப்குமார், ஆரம்பத்தில் ஒரு உறுப்பினராக இருந்தார் எனவும், பின்னிட்டு திலிப்குமார் தனியாகவும், எதிரிகள் தனியாகவும் பிரிந்து நாழிக்கல்பட்டியில் உள்ள விநாயகர் கோவிலில் விநாயகர் சிலை வைத்து விநாயகர் சதுர்த்தியை தனித்தனியாக கொண்டாடினார்கள் என்றும், 04.09.2019 அன்று காலை 10 மணியளவில் எதிரிகள் தரப்பினரும், திலிப்குமார் தரப்பினரும் விநாயகர் சிலை கரைப்பதற்காக தனித்தனியாக எடுத்துக்கொண்டு மேட்டுர் நோக்கி வரும்போது நாழிக்கல் பட்டி, அம்பேத்கர் நகர் மூலக்கடை அருகே இருதரப்பினரும் ஒரே இடத்திற்கு வந்ததால் ஒருவரை பார்த்து ஒருவர் பேசிக்கொண்டதில் தகராறு ஏற்பட்டது என்றும், 1ம் எதிரியை பார்த்து திலிப்குமார் கை நீட்டி பேசி தகராறு செய்துள்ளார் என்றும், அதனால் 1ம் எதிரியின் தரப்பினர் இவ்வாறு நடந்துகொண்டால் திலிப்குமாரை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்கள் என்றும், எதிரிகள் 4ம் எதிரி கோகுல்ராசுக்கு வேண்டியவர்கள் என்றும், அவர் தலைமையில் தான் வந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள் என்றும், நான் கேள்விப்பட்டதாக தெரிவித்தேன் என்றும், பின்பு எதிரிகள் இரவு சுமார் 7.30 மணியளவில் திலிப்குமார் மற்றும் மற்றொரு கௌதமும் அருகில் உள்ள சுரேஷ்குமார் என்பவர் வீட்டில் பேசிக்கொண்டிருந்தபோது 1ம் எதிரி திலிப்குமாரை கையால் அடித்தார் என்றும், அதை தடுக்க வந்த சரண்குமாரை, இளவர் சரவணன் சூரி கத்தியால் வெட்டினார் என்றும், அதனால் சரண்குமாருக்கு தலை, நெற்றி மற்றும் சுண்டுவிரல் ஆகியவற்றில் காயம் ஏற்பட்டுவிட்டது என்றும், இதனை பார்த்து நிகிதாவும், அவரது தாயார் மற்றும் தகப்பனாரும் தடுத்தார்கள் என்றும், ராஜேந்திரனை 1ம் எதிரி எட்டி உதைத்து கிழே தள்ளினார் என்றும், வசந்தியை 1ம்

Sd/- R. Velaras,
I Addional District Judge,
Salem

எதிரி கிழே தள்ளி அவர் வைத்திருந்த கத்தியால் வெட்டினார் என்றும், அதனால் வசந்திக்கு வலது முழங்கையில் காயம் ஏற்பட்டது என்றும், 2 மற்றும் 3ம் எதிரிகள் வசந்தி மற்றும் ராஜேந்திரனை அவர்களது மகன் திலிப்குமாரை காப்பாற்றிவிட கூடாது என்று பிடித்து கொண்டார்கள் என்றும், அப்போது 4ம் எதிரி ஒன்றும் நடக்காது என்று கூறி எங்களை வஞ்சகமாக ஏமாற்றி அவர்கள் வீட்டிற்கு கொண்டுவந்து விட்டுவிட்டார்கள் என்றும், ஆனால் வசந்தி, திலிப்குமாரை மீட்பதற்காக மீண்டும் அங்கே சென்றபோது 1ம் எதிரி திலிப்குமாரை கத்தியால் இடதுபக்க அல்லையில் குத்தினார் என்றும், இளவர் சரணவன் திலிப்குமாரின் வலது கால் முட்டியில் சூரிகத்தியால் வெட்டினார் என்றும், 2 மற்றும் 3 எதிரிகள் அதனை தடை செய்யாமல் வேடிக்கை பார்த்து கொண்டிருந்தார்கள் என்றும், மேற்படி சம்பவத்தில் 2 மற்றும் 3 எதிரிகளுக்கு சம்மந்தம் உள்ளது என்றும் காயம்பட்ட திலிப்குமார் ரத்தம் சொட்டசொட்ட அருகிலுள்ள அழகு என்கிற சுரேஷ்குமார் வீட்டிற்குள் சென்று ஒளிந்து கொண்டார் என்றும், இதனை பார்த்த நான், கனிமொழி, மற்றொரு கௌதம், ஆகியோர்கள் ஏன்டா திலீப்குமாரை வெட்டினீர்கள் என்று கேட்டபோது அவர்கள் கையில் வைத்திருந்த கத்தியை காட்டி அருகில் யாரும் வந்தால் உங்களையும் வெட்டிவிடுவோம் என்று எங்களையும் மிரட்டினார்கள் என்றும், பின்னர் அங்கிருந்து 1ம் எதிரியும், இரண்டு இளவர்களும் ஓடிவிட்டார்கள் என்றும், அவர்களை தொடர்ந்து 2 மற்றும் 3 ம் எதிரிகளும் ஓடிவிட்டார்கள் என்றும், காயம்பட்ட வசந்தியும், திலிப்குமாரும், சரண்குமாரும், 108 ஆம்புலன்ஸ் மூலம் சேலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றார்கள். திலிப்குமார் இறந்துவிட்டதால் அவரது உடலை சவகிடங்கிற்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், வசந்தியும், சரண்குமாரும் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்தார்கள் என்றும், மல்லூர் போலிசார் சேலம் அரசு மருத்துவமனைக்கு வந்து எங்களை விசாரித்தபோது திலிப்குமாரை கொலை செய்த எதிரிகளின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்

Sd/- R. Velaras,
I Addional District Judge,
Salem

என்று புகார் வாக்குமூலம் வசந்தி கொடுத்தார் என்றும், போலிசார் உரிய நடவடிக்கை எடுத்து எதிரிகளை கைது செய்ய வேண்டும் என்று தெரிவித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் அவர்கள் செய்தார்கள் என்றும், அதன் காரணமாக அவர்கள் குடும்பத்தினருக்கு பாதுகாப்பு வழங்கும் பொருட்டு ஒருமாதகாலம் போலிசார் வசந்தி வீட்டினருகில் காவல்பணியில் ஈடுபட்டார்கள் என்றும், மீண்டும் 13.09.2019 அன்று காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும், அப்போது வழக்கு சங்கதிகளை நான் அவரிடம் தெரிவித்தேன் என்றும், அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் தான் உண்மை என்றும் தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் 1ம் எதிரி வெட்டி கொலை செய்யப்பட்டுவிட்டார் என்ற காரணத்தினால் தான் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை (2 மற்றும் 3 எதிரி தரப்பில்)

இல்லை

குறுக்குவிசாரணை (4 எதிரி தரப்பில்)

இல்லை

Sd/- R. Velaras,
I Addional District Judge,
Salem

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

அமர்வு வழக்கு எண்.229/2021

அ.சா.– 7

பெயர் : திரு . முருகேசன்	கிராமம்: அம்மாபேட்டை, நஞ்சம்பட்டி
த/பெ. : திரு. காளியப்பன்	தாலூக்கா : சேலம்
வயது : 46	தொழில்: கூலி வேலை

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 44 of 1969, this the 08th day of September, 2025.

(2 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்குரைஞர் ஆஜர்)

முதல்விசாரணை:–

நான் அம்மாபேட்டை, நஞ்சம்பட்டியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இறந்துபோன 1ம் எதிரியையும் எனக்கு தெரியாது. இவ்வழக்கில் இறந்துபோன திலிப்குமார் எனது தங்கை மகன் ஆவார். எனது தங்கை மகன் இறந்துவிட்டார் என்பதை எனது தங்கை மகள் நிகிதா எனக்கு தெரிவித்தார். நான் சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அவர் ஐசியு வில் அட்மிட் செய்யப்பட்டு இருந்தார். போலிசார் அங்கிருந்தார்கள்., விசாரித்தார்கள் . போலிசார் என்னையும் விசாரித்தார்கள். நான் எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னேன்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கேட்டு, அனுமதிக்கப்பட்டது.)

குறுக்குவிசாரணை(அரசு தரப்பில்):–

நான் போலிசார் விசரணையில் அம்மாபேட்டை, நஞ்சம்பட்டியில் வசித்து வருவதாகவும், இளையபாரதம் நண்பர்கள் குழு நாழிக்கல்பட்டியில் செயல் பட்டு

Sd/- R. Velaras,
I Addional District Judge,
Salem

வருவதாகவும், அந்த குழுவில் திலிப்குமார், ஆரம்பத்தில் ஒரு உறுப்பினராக இருந்தார் எனவும், பின்னிட்டு திலிப்குமார் தனியாகவும், எதிரிகள் தனியாகவும் பிரிந்து நாழிக்கல்பட்டியில் உள்ள விநாயகர் கோவிலில் விநாயகர் சிலை வைத்து விநாயகர் சதுர்த்தியை தனித்தனியாக கொண்டாடினார்கள் என்றும், 04.09.2019 அன்று காலை 10 மணியளவில் எதிரிகள் தரப்பினரும், திலிப்குமார் தரப்பினரும் விநாயகர் சிலை கரைப்பதற்காக தனித்தனியாக எடுத்துக்கொண்டு மேட்டூர் நோக்கி வரும்போது நாழிக்கல் பட்டி, அம்பேத்கர் நகர் மூலக்கடை அருகே இருதரப்பினரும் ஒரே இடத்திற்கு வந்ததால் ஒருவரை பார்த்து ஒருவர் பேசிக்கொண்டதில் தகராறு ஏற்பட்டது என்றும், 1ம் எதிரியை பார்த்து திலிப்குமார் கை நீட்டி பேசி தகராறு செய்துள்ளார் என்றும், அதனால் 1ம் எதிரியின் தரப்பினர் இவ்வாறு நடந்துகொண்டால் திலிப்குமாரை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்கள் என்றும், எதிரிகள் 4ம் எதிரி கோகுல்ராசுக்கு வேண்டியவர்கள் என்றும், அவர் தலைமையில் தான் வந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள் என்றும், நான் கேள்விப்பட்டதாக தெரிவித்தேன் என்றும், பின்பு எதிரிகள் இரவு சுமார் 7.30 மணியளவில் திலிப்குமார் மற்றும் மற்றொரு கௌதமும் அருகில் உள்ள சுரேஷ்குமார் என்பவர் வீட்டில் பேசிக்கொண்டிருந்தபோது 1ம் எதிரி திலிப்குமாரை கையால் அடித்தார் என்றும், அதை தடுக்க வந்த சரண்குமாரை, இளவர் சரவணன் சூரி கத்தியால் வெட்டினார் என்றும், அதனால் சரண்குமாருக்கு தலை, நெற்றி மற்றும் சுண்டுவிரல் ஆகியவற்றில் காயம் ஏற்பட்டுவிட்டது என்றும், இதனை பார்த்து நிகிதாவும், அவரது தாயார் மற்றும் தகப்பனாரும் தடுத்தார்கள் என்றும், ராஜேந்திரனை 1ம் எதிரி எட்டி உதைத்து கிழே தள்ளினார் என்றும், வசந்தியை 1ம் எதிரி கிழே தள்ளி அவர் வைத்திருந்த கத்தியால் வெட்டினார் என்றும், அதனால் வசந்திக்கு வலது முழங்கையில் காயம் ஏற்பட்டது என்றும், 2 மற்றும் 3ம் எதிரிகள் வசந்தி மற்றும் ராஜேந்திரனை அவர்களது மகன் திலிப்குமாரை காப்பாற்றிவிட

Sd/- R. Velaras,
I Addional District Judge,
Salem

கூடாது என்று பிடித்து கொண்டார்கள் என்றும், அப்போது 4ம் எதிரி ஒன்றும் நடக்காது என்று கூறி எங்களை வஞ்சகமாக ஏமாற்றி அவர்கள் வீட்டிற்கு கொண்டுவந்து விட்டுவிட்டார்கள் என்றும், ஆனால் வசந்தி, திலிப்குமாரை மீட்பதற்காக மீண்டும் அங்கே சென்றபோது 1ம் எதிரி திலிப்குமாரை கத்தியால் இடதுபக்க அல்லையில் குத்தினார் என்றும், இளவர் சரணவன் திலிப்குமாரின் வலது கால் முட்டியில் சூரிகத்தியால் வெட்டினார் என்றும், 2 மற்றும் 3 எதிரிகள் அதனை தடை செய்யாமல் வேடிக்கை பார்த்து கொண்டிருந்தார்கள் என்றும், மேற்படி சம்பவத்தில் 2 மற்றும் 3 எதிரிகளுக்கு சம்மந்தம் உள்ளது என்றும் காயம்பட்ட திலிப்குமார் ரத்தம் சொட்டசொட்ட அருகிலுள்ள அழகு என்கிற சுரேஷ்குமார் வீட்டிற்குள் சென்று ஒளிந்து கொண்டார் என்றும், இதனை பார்த்த கவுதம், கனிமொழி, மற்றொரு கௌதம், ஆகியோர்கள் ஏன்டா திலீப்குமாரை வெட்டினீர்கள் என்று கேட்டபோது அவர்கள் கையில் வைத்திருந்த கத்தியை காட்டி அருகில் யாரும் வந்தால் உங்களையும் வெட்டிவிடுவோம் என்று எங்களையும் மிரட்டினார்கள் என்றும், பின்னர் அங்கிருந்து 1ம் எதிரியும், இரண்டு இளவர்களும் ஓடிவிட்டார்கள் என்றும், அவர்களை தொடர்ந்து 2 மற்றும் 3 ம் எதிரிகளும் ஓடிவிட்டார்கள் என்றும், காயம்பட்ட வசந்தியும், திலிப்குமாரும், சரண்குமாரும், 108 ஆம்புலன்ஸ் மூலம் சேலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றார்கள். திலிப்குமார் இறந்துவிட்டதால் அவரது உடலை சவகிடங்கிற்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், வசந்தியும், சரண்குமாரும் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்தார்கள் என்றும், மல்லூர் போலிசார் சேலம் அரசு மருத்துவமனைக்கு வந்து எங்களை விசாரித்தபோது திலிப்குமாரை கொலை செய்த எதிரிகளின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று புகார் வாக்குமூலம் வசந்தி கொடுத்தார் என்றும், போலிசார் உரிய நடவடிக்கை எடுத்து எதிரிகளை கைது செய்ய வேண்டும் என்று தெரிவித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் அவர்கள் செய்தார்கள் என்றும்,

Sd/- R. Velaras,
I Addional District Judge,
Salem

அதன் காரணமாக அவர்கள் குடும்பத்தினருக்கு பாதுகாப்பு வழங்கும் பொருட்டு ஒருமாதகாலம் போலிசார் வசந்தி வீட்டினருகில் காவல்பணியில் ஈடுபட்டார்கள் என்றும், மீண்டும் 13.09.2019 அன்று காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும், அப்போது வழக்கு சங்கதிகளை நான் அவரிடம் தெரிவித்தேன் என்றும், அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் தான் உண்மை என்றும் தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் 1ம் எதிரி வெட்டி கொலை செய்யப்பட்டுவிட்டார் என்ற காரணத்தினால் தான் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை (2 மற்றும் 3 எதிரி தரப்பில்)

இல்லை

குறுக்குவிசாரணை (4 எதிரி தரப்பில்)

இல்லை

Sd/- R. Velaras,
I Addional District Judge,
Salem

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

அமர்வு வழக்கு எண்.229/2021

அ.சா.– 8

பெயர் : திரு . கார்த்திகேயன்	கிராமம்: நாழிக்கல்பட்டி
த/பெ. : திரு. மாரியப்பன்	தாலூக்கா : சேலம்
வயது : 25	தொழில்: வங்கி பதிவறை எழுத்தர்

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 44 of 1969, this the 08th day of September, 2025.

(2 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்குரைஞர் ஆஜர்)

முதல்விசாரணை:–

நான் நாழிக்கல்பட்டியில் வசித்து வருகிறேன். சேலம் ஜனா வங்கியில் பதிவறை எழுத்தராக பணிபுரிகிறேன். ஆஜர் எதிரிகளையும் இறந்துபோன 1ம் எதிரியையும் எனக்கு தெரியும், இவ்வழக்கில் இறந்துபோன திலிப்குமார் எனது சித்தி மகன் ஆவார். எனது சித்தி மகன் இறந்துவிட்டார் என்பதை எனது மாமா மகன் கவுதம் எனக்கு தெரிவித்தார். நான் சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். திலிப்குமாருக்கு அடிப்பட்டுவிட்டதாக சொன்னார்கள். எவ்வாறு அடிப்பட்டது என்பது எனக்கு தெரியாது. போலிசார் அங்கிருந்தார்கள்., விசாரித்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கேட்டு, அனுமதிக்கப்பட்டது.)

குறுக்குவிசாரணை(அரசு தரப்பில்):–

நான் போலிசார் விசரணையில் நாழிக்கல்பட்டியில் வசித்து வருவதாகவும்,

Sd/- R. Velaras,
I Addional District Judge,
Salem

இளையபாரதம் நண்பர்கள் குழு நாழிக்கல்பட்டியில் செயல் பட்டு வருவதாகவும், அந்த குழுவில் திலிப்குமார், ஆரம்பத்தில் ஒரு உறுப்பினராக இருந்தார் எனவும், பின்னிட்டு திலிப்குமார் தனியாகவும், எதிரிகள் தனியாகவும் பிரிந்து நாழிக்கல்பட்டியில் உள்ள விநாயகர் கோவிலில் விநாயகர் சிலை வைத்து விநாயகர் சதுர்த்தியை தனித்தனியாக கொண்டாடினார்கள் என்றும், 04.09.2019 அன்று காலை 10 மணியளவில் எதிரிகள் தரப்பினரும், திலிப்குமார் தரப்பினரும் விநாயகர் சிலை கரைப்பதற்காக தனித்தனியாக எடுத்துக்கொண்டு மேட்டுர் நோக்கி வரும்போது நாழிக்கல் பட்டி, அம்பேத்கர் நகர் மூலக்கடை அருகே இருதரப்பினரும் ஒரே இடத்திற்கு வந்ததால் ஒருவரை பார்த்து ஒருவர் பேசிக்கொண்டதில் தகராறு ஏற்பட்டது என்றும், 1ம் எதிரியை பார்த்து திலிப்குமார் கை நீட்டி பேசி தகராறு செய்துள்ளார் என்றும், அதனால் 1ம் எதிரியின் தரப்பினர் இவ்வாறு நடந்துகொண்டால் திலிப்குமாரை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்கள் என்றும், எதிரிகள் 4ம் எதிரி கோகுல்ராசுக்கு வேண்டியவர்கள் என்றும், அவர் தலைமையில் தான் வந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள் என்றும், நான் கேள்விப்பட்டதாக தெரிவித்தேன் என்றும், பின்பு எதிரிகள் இரவு சுமார் 7.30 மணியளவில் திலிப்குமார் மற்றும் மற்றொரு கௌதமும் அருகில் உள்ள சுரேஷ்குமார் என்பவர் வீட்டில் பேசிக்கொண்டிருந்தபோது 1ம் எதிரி திலிப்குமாரை கையால் அடித்தார் என்றும், அதை தடுக்க வந்த சரண்குமாரை, இளவர் சரவணன் சூரி கத்தியால் வெட்டினார் என்றும், அதனால் சரண்குமாருக்கு தலை, நெற்றி மற்றும் சுண்டுவிரல் ஆகியவற்றில் காயம் ஏற்பட்டுவிட்டது என்றும், இதனை பார்த்து நிகிதாவும், அவரது தாயார் மற்றும் தகப்பனாரும் தடுத்தார்கள் என்றும், ராஜேந்திரனை 1ம் எதிரி எட்டி உதைத்து கிழே தள்ளினார் என்றும், வசந்தியை 1ம் எதிரி கிழே தள்ளி அவர் வைத்திருந்த கத்தியால் வெட்டினார் என்றும், அதனால் வசந்திக்கு வலது முழங்கையில் காயம் ஏற்பட்டது என்றும், 2 மற்றும் 3ம் எதிரிகள்

Sd/- R. Velaras,
I Addional District Judge,
Salem

வசந்தி மற்றும் ராஜேந்திரனை அவர்களது மகன் திலிப்குமாரை காப்பாற்றிவிட கூடாது என்று பிடித்து கொண்டார்கள் என்றும், அப்போது 4ம் எதிரி ஒன்றும் நடக்காது என்று கூறி எங்களை வஞ்சகமாக ஏமாற்றி அவர்கள் வீட்டிற்கு கொண்டுவந்து விட்டுவிட்டார்கள் என்றும், ஆனால் வசந்தி, திலிப்குமாரை மீட்பதற்காக மீண்டும் அங்கே சென்றபோது 1ம் எதிரி திலிப்குமாரை கத்தியால் இடதுபக்க அல்லையில் குத்தினார் என்றும், இளவர் சரணவன் திலிப்குமாரின் வலது கால் முட்டியில் சூரிகத்தியால் வெட்டினார் என்றும், 2 மற்றும் 3 எதிரிகள் அதனை தடை செய்யாமல் வேடிக்கை பார்த்து கொண்டிருந்தார்கள் என்றும், மேற்படி சம்பவத்தில் 2 மற்றும் 3 எதிரிகளுக்கு சம்மந்தம் உள்ளது என்றும் காயம்பட்ட திலிப்குமார் ரத்தம் சொட்டசொட்ட அருகிலுள்ள அழகு என்கிற சுரேஷ்குமார் வீட்டிற்குள் சென்று ஒளிந்து கொண்டார் என்றும், இதனை பார்த்த கவுதம், கனிமொழி, மற்றொரு கௌதம், ஆகியோர்கள் ஏன்டா திலீப்குமாரை வெட்டினீர்கள் என்று கேட்டபோது அவர்கள் கையில் வைத்திருந்த கத்தியை காட்டி அருகில் யாரும் வந்தால் உங்களையும் வெட்டிவிடுவோம் என்று எங்களையும் மிரட்டினார்கள் என்றும், பின்னர் அங்கிருந்து 1ம் எதிரியும், இரண்டு இளவர்களும் ஓடிவிட்டார்கள் என்றும், அவர்களை தொடர்ந்து 2 மற்றும் 3 ம் எதிரிகளும் ஓடிவிட்டார்கள் என்றும், காயம்பட்ட வசந்தியும், திலிப்குமாரும், சரண்குமாரும், 108 ஆம்புலன்ஸ் மூலம் சேலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றார்கள். திலிப்குமார் இறந்துவிட்டதால் அவரது உடலை சவகிடங்கிற்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், வசந்தியும், சரண்குமாரும் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்தார்கள் என்றும், மல்லூர் போலிசார் சேலம் அரசு மருத்துவமனைக்கு வந்து எங்களை விசாரித்தபோது திலிப்குமாரை கொலை செய்த எதிரிகளின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று புகார் வாக்குமூலம் வசந்தி கொடுத்தார் என்றும், போலிசார் உரிய நடவடிக்கை எடுத்து எதிரிகளை கைது செய்ய வேண்டும் என்று தெரிவித்து மாவட்ட

Sd/- R. Velaras,
I Addional District Judge,
Salem

ஆட்சியர் அலுவலகத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் அவர்கள் செய்தார்கள் என்றும், அதன் காரணமாக அவர்கள் குடும்பத்தினருக்கு பாதுகாப்பு வழங்கும் பொருட்டு ஒருமாதகாலம் போலிசார் வசந்தி வீட்டினருகில் காவல்பணியில் ஈடுபட்டார்கள் என்றும், மீண்டும் 13.09.2019 அன்று காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும், அப்போது வழக்கு சங்கதிகளை நான் அவரிடம் தெரிவித்தேன் என்றும், அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் தான் உண்மை என்றும் தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் 1ம் எதிரி வெட்டி கொலை செய்யப்பட்டுவிட்டார் என்ற காரணத்தினால் தான் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை (2 மற்றும் 3 எதிரி தரப்பில்)

இல்லை

குறுக்குவிசாரணை (4 எதிரி தரப்பில்)

இல்லை

Sd/- R. Velaras,
I Addional District Judge,
Salem